# சங்க இலக்கியத்தில் வாழ்வியல்

*முனைவர் மு. கலாகோபி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சங்கரன்கோவில்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5207

*முன்னுரை*

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்ததால் தங்கள் வாழ்வில் இடம் பெற்ற இயற்க்கையை இலக்கியத்திலும் அமைத்துத்தந்தனர். புலவர்கள் அழகிய இயற்கைக் காட்ச்சிகளைச் சங்க இலக்கியங்களாக நமக்குத் தந்துள்ளனர். இயற்கையோடு இணைந்த தம் அனுபவ உணர்ச்சியை இலக்கியமாகப் படைத்துக் காட்டியிருப்பதால் சங்க இலக்கியங்கள் மனித வாழ்க்கையோடு தொடர்புடையதாக அமைகின்றன. சங்க கால மக்கள் தங்களுக்கு பிடித்தமான நிலத்தை தேர்ந்தெடுத்து வாழ்ந்தனர். அவர்கள் வாழிடங்கள் காடாக, மலையாக, கடற்கரையாக,வயல்குழிந்த பகுதியாக இருந்தது அவற்றை நாகரிகத்திற்கு ஏற்றாற்போல் மாற்றி அமைத்து வாழ்ந்து வந்தனர். புவி என்பது நிலம், நீர், காற்று, வானம் என்பதை உணர்ந்திருந்தனர் என்பதனை,

***“மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரு புதத்து இயற்கை போல”***

**(புறம் - 2)**

எனும் புறநானூற்று பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறன்றது. அக்கால மக்கள் தொழில் நுட்பத்தோடும், மழகியல் உணர்வோடும் வாழ்ந்தனர். அவர்களின் வாழ்வியல் முறை இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. நிலம், பொழுது, தட்பவெட்பதிற்கு ஏற்றவாறு வாழ்வியல் முறையை அமைத்துக் கொண்டனர். இவ்வாழ்வியல் முறைமைகள் குறித்துப் பேசுவது இக்கட்டுரையாகும்.

**வைகறையில் துயில் எழுதுதல்**

பண்டைய தமிழக மக்கள் கதிரவன் உதயமாவதற்கு முன்பு துயிலை இருந்தனர். அந்தனர், மந்திரம் ஓதும் ஒலியும் யாழோர் எழுப்பும் இசைமொழியும் மன்னனுடைய அரண்மனையில் ஒலிக்கும் காலை முரசும் அரசனை எழுப்புவோரின் பாடல்களும் மக்களைதூக்கத்தில் இருந்து எழுப்புகின்றன என்பதை,

> ***"நான்மறைக் கேள்வி நவில் குறள் எழுப்ப***
> ***ஏம கன் துயில் எழுதல் அல்லதை***
> ***வாழிய வஞ்சியும் கோழியும் போலக்***
> ***கோழியன் எழாது எம்பேர் ஊர் துயிலே"***
>
> ***(பரிபாடல் - 8)***

எனும் பாடல் வரிகளின் மூலம் வழி உணரலாம்.

**நீராடுதல்**

மனதிற்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைத் தருவது நீராடுதல். உடல்சுத்தத்திற்கு, குளத்திலும், ஆற்றிலும் நீராடினர். மனதைச் சுத்தம் செய்வதற்கு தெய்வத்தினை வழிபட்டு வந்தனர். நீராடுதல் தமிழரிடம் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் பழக்கமாக இருந்து வருகின்றது. அக்கால மக்கள் நீராடுவதற்கென்று தனியான ஆடை அணிகலன்களை அணிந்தனர். பெண்கள் அழங்காரமான ஆடை அணிகலன்களை அணிந்து நீராடினர். சிலர் பொன்னால் செய்த புக்களை அணிந்தனர். சிலர் முன்னர் அணிந்திருந்த சந்தனச் சாந்தினை மாற்றிவிட்டு துகில் புகையிலையாகிய சாந்தினைத் தம் உடம்பில் விகுதியாகப் புசிப்புடவை அணிந்து நீராடினர்.

> ***"மின் அவிர் ஒளி இழை வேயுமோரும்***
> ***பொன் அடர்ப் பும் புனை திருத்துவோரும்***
> ***அகில்கெழு சாந்தும் மாற்றி ஆற்றப்***
> ***புகைகெழு சாந்தம் புசுவோரும்***
> ***கார் கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்***
> ***வேர் பிணி பலர் மலர் வேயுமோரும்***
> ***புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்"***
>
> ***(பரிபாடல் 12, 11-17)***

எனும் பரிபாடலின் வரிகள் உணர்த்துகின்றது.

**ஆடை**

"ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்" எனும் பழமொழிக்கு ஏற்ப மனிதனுக்கு ஆடைகள் மிகவும் இன்றியமையாதது. மனிதனின் தரத்தையும், சிறப்பையும் காட்டுவனவாக ஆடைகளும் அணிக லன்களும் திகழ்கின்றன. நாகரிகம் வளராத பழங்காலத்தில் மனிதன் தாவரங்களின் மரத்தின் பட்டைகள், நார் விலங்குகளின் தோல் போன்றவற்றை ஆடையாகப் பயன்படுத்தினார் என்பதை "மரல்நார் உடுக்கை மலை உறை குறவர்" எனும் நற்றிணைப் பாடலடிகள் உணர்த்துகின்றது. பண்டைக்காலத்தில் பருத்தி பயிரிடப் பட்டது என்பதை,

> ***"கல்சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்***
> ***தாழி முதல்கலித்த கோழினைப் பருத்த"***
>
> ***(அகம் 109 6-8)***
>
> ***"காஞ்சியின் அழுக்குக் கரும்பருத்தியாக்கும்***
> ***தீயுனல் ஊரன்"***
>
> ***(அகம் 156 6-7)***

எனும் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**கல்வி**

உலகத்தில் உள்ள உயிரினங்களில் மனித இனம்தலைசிறந்தது. மற்ற உயிரினங்களுக்கு மற்றவர்களுக்கு இல்லாத ஆறாவது அறிவினை பகுத்தறியும் அறிவு மனித இனத்திற்கு மட்டும் இருக்கின்றது அத்தகைய அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையானது கல்வி, கல்வி என்பது பண்பற்ற மனிதனை பயன்படுத்துவது கல்வியைக் கசடறக் கற்க வேண்டும் என்பதை,

> ***"கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
> ***நிற்க அதற்குத் தக"***
>
> ***(குறள் 391)***

என்கிறார் வள்ளுவர் சுவாமி விவேகானந்தர் அவர்கள். "ஒவ்வொரு மனிதனுள்ளும் தெய்வீகத் தன்மையும் புரணத்துவமும் உறைந்துள்ளது. அதை வெளியே கொண்டு வர வேண்டுமென்றால் அதற்கு கல்வியே சிறந்த வழி என்பர்" என்கிறார்.

**கலை**

பண்டைய மக்களிடம் கலையுணர்வு இருந்திருந்தன. அவர்கள் அழகுக்கலைகள் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் ஆகியவற்றை அழகுக்கலைகள் என்று அழைப்பர். கலை என்பதற்கு அவர்கள் கலை என்பது இயற்கை ஆன்மீக கண்ணாடியில் பட்டு எதிர்த்தோன்றும் சாயலேயாகும். அங்ஙனம் எதிர்த்தோன்றுகையில் பனத்தின் இயல்புகள் உணர்ச்சி ஆசை என்பவற்றோடு கலந்தே அது வெளி வருகிறது என்று கூறுகின்றார். கட்டிடங்கள் கட்டுவதற்கு நல்லநாள் குறித்துத் திசைகளையும், திசைத் தெய்வங்களையும் நோக்கி நுண்ணியதாக கயிறிட்டுக் கட்டிட நூல் கூறும் இலக்கணப்படி கட்டினர் என்பதை,

**"நூலறிவு புலவர் நுண்ணிநில் கயிறிட்டுத்**
**தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்**
**பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து"**

***(நெடுநல்வாடை 75-77)***

எனும் நெடுநல்வாடை பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**விருந்தோம்பல்**

தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பல் சிறந்து விளங்குகின்றன. தமிளர்களின் இல்லற வாழ்வின் இயல்பினை அளக்க உதவும் அளவுகோலாக விருந்தோம்பல் திகழ்கின்றது. உண்ணும் உணவு மருந்தே என்றாலும் விருந்தினர்க்கும் கொடுத்துத் தாமும் உண்டு மகிழ்ந்தனர் என்பதை "மருந்தே மகள் ஆயினும் விருந்தொடு உண்" என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். இல்லற மகளிரின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல் என்பதை,

**"விருந்து பெருகு நன்போலும் திருந்திழை**
**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லைச் சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்"**

***(நற் - 142)***

எனும் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**காதல்**

அனைத்து உயிர்களிடத்து தோன்றிய அன்புணர்வே காதல் எனக் கொண்டாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் அன்புணர்வே காதல் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. காதல் என்ற சொல் "அன்பு, வேட்கை என்ற பொருளைத் தருகிறது. காதல் என்பது மனித வாழ்வில் பல பரிமாணங்களில் இருக்கின்றது. இது கண்களில் அரும்பு இதயத்தில் மலரும் அல்லது மலர்ந்த காதலின் வாசம் மேனியெங்கும் தோற்றுவிக்கும் தலைவனொடு செய்து கொண்ட காதலின் தன்மையைக் குறுந்தொகையில்,

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவு இன்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் புக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"**

***(குறுந்தொகை 3)***

எனும் பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

**திருமணம்**

காதலில் ஈடுபட்டவர்கள் அதனை இல்லையென்று மறுத்த நிலையில் கரணம் தோன்றியது இதனை,

**"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"**

***(தொல் பொருள் 143)***

எனும் நூற்பா மூலம் அறிய முடிகின்றது. வேங்கைப் பு புக்கின்ற காலமும் திங்களைச் சுற்றி ஒளி வட்டம் சூழும் காலமும் (ரோகிணி) திருமணம் செய்வதற்குரிய காலமாகக் கருதினர் என்பதை,

**"வேங்கை விரிவு இடம் நோக்கி**
**வீங்கு இறைப் பணைத்தோள் வரைந்தனன்**
**கொளற்கே"**

***(கலி 38 24-26)***

எனும் கலித்தொகை பாடல் வழியாக உணரலாம்.

**இல்லறம்**

இல்வாழ்க்கையில் பெண்கள் முதன்மை யானவர்களாய் இருந்தனர். இல் வாழ்க்கையைத் திறமையுடன் நடத்த வேண்டிய முறையில் நடத்தினால் அதைக்காட்டிலும் இனிய வாழ்வு வேறு இல்லை என்பதை,

**“மனையுறை வாழ்க்கை வள்ளியாங்கு மருவின்**
**இனியவும் உளவே”**

***(குறள் 233)***

குறுந்தொகை பாடலின் வழி அறிய முடிகின்றது. இல்லறம் நல்லறமாகத் திகழ்ந்து வாழ்வு சிறந்தகாலம்.

**நட்பு**

ஒருவருக் கொருவர் அன்பு செலுத்தி நெருங்கிப் பழகி உறவினர் அல்லா தோருடன் பற்றும் பாரமும் கொண்டு வாழ்வது நட்பு. நட்பு என்பதற்கு சிநேகம், உறவு, சுற்றம், நண்பன், காதல், அரசாங்கம், கைபுட்டு, மாற்றத்தோடு நட்பு செய்தல் எனப் பொருள் தருகிறது. மெய்யப்பன் அகராதி மேலும் கிரியாவின் தற்கால தமிழ் அகராதி “ஒத்த கருத்து நலன், அக்கறை முதலியவற்றின் அடிப்படையில் பொதுவாக உறவினர் அல்லாதவருடன் கொள்ளும் உறவு என்று கூறுகிறது.

நன்பணுக்குத் துன்பம் நேர்ந்தால் அப்பொழுதே சென்று அத்துன்பத்தை நீக்க வேண்டும் என்பதை,

**“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு”**

***(குறள் 788)***

என்று குறள் எடுத்துக் கூறுகிறது

**நம்பிக்கை**

சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிப்பது அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. நம்பிக்கை என்பது சிலவற்றை மறுக்கமுடியாத உண்மை என்று கருதி ஏற்றுக் கொள்வதே நம்பிக்கை என வரையறுக்கலாம் என்று தே.லுந்து கூறுகிறார்.

நாளும் கோளும் பார்த்து நல்ல செயல்களில் ஈடுபடும் பழக்கம் பண்டைய மக்க ளிடையே பரவலாக இருந்தன. நாட்களை விண்மீன்களின் நிலையைக் கொண்டு நிச்சயித்த நிலையில் நாளுக்கும் கோளுக்கும் தொடர்பு கற்பிக்கப்பட்டது. அவற்றில் திருமணம், பிறந்தநாள், விதை விதைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதை,

**“கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்**
**கோற்கால் நீங்கிய கொடுவேண் திங்கட்**
**கேடில் விழுப்புகழ் நான்தலை வந்தென்”**

***(அகம் 86 3-7)***

எனும் பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**வழிபாடு**

இயற்கையின் புதிரான செயலை மனிதன் உணர இயலாத நிலையில் அதனை வழிபட்டு அமைதிப்படுத்த முயன்ற போது வழிபாடு உருவாகியது. இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற பொருட்களை வழிபடும் தன்மையினை இயற்கை வழிபாடாகக் கருதினர். இயற்கை மனித நலத்திற்குப் பயன்பட்டதை உணர்ந்து மக்கள் அவற்றைத் தெய்வமாக வணங்கி வழிபட்டனர் இதனை,

**“தயங்குதிரைப் பெருங்கட லுலகு தொழத்தோன்றி**
**வயங்கேதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்”**

***(அகம் 263 1-2)***

எனும் பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது

**விழாக்கள்**

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும் மறுமலர்ச்சியும், புத்து ணர்ச்சியும் ஊட்டுவன விழாக்கள். மனித இனத்தை ஒன்றுபடுத்தி மகிழ்ச்சியில்

திளைக்க வைப்பதே விழாக்கள். பண்டைய இலக்கியங்கள் விழாவினை "விழவு" "விழா" "சாறு" என்ற சொற்களால் சுட்டுகின்றனர் என்பதை,

> **"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்**
> **பழியில ராயினும் பலர்புறங் கூறும்"**
> ***(அகம் 115 1-2)***
>
> **"ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக்**
> **கால் கோ ளென்றுக்கிக் கதுமென நோக்கி"**
> ***(கலி 83 14-15)***

என்கின்ற பாடல் அடிகளால் அறிய முடிகின்றது.

### நிறைவாக

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததையும், இயற்கையைத் தெய்வமாக வழிபட்டு வாழ்ந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆய்ந்தறியும் பகுத்தறிவு மனித இனத்திற்கு மட்டுமே உண்டு. அத்தகைய அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வி சங்க காலத்தில் இருந்துள்ளதைப் பெண்கள் கல்வி கற்று இருப்பதை ஔவையாரின் பாடல் வழி அற்ய முடிகின்றது. மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது நாகரிகமும், பண்பாடும் உலக மக்களிடையே பழமையான நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் சங்க இலக்கியம் வழி வகுக்கிறது.

### துணைநூற் பட்டியல்


1. இராமகிருஷ்ணன். அ - அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு சர்வோதய இலக்கியப் பண்ணை மதுரை.
2. சிவசுப்பிரமணியன். வே - அகநானூறு மூலமும் வரையும் உ.வே.சா.நூல் நிலையம் சென்னை.
3. சுமதி கனகசபை - குறுந்தொகை காட்டும் காதல் வாழ்க்கை செங்காமிர்தம் பதிப்பகம் சென்னை.
4. செயபால். இரா - அகநானூறு டேஊர் சென்னை.
5. சேதுபிள்ளைஇ ரா.பி - தமிழகம் ஊரும் பேரும் பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
6. தடசினாமூர்த்தி. - தமிழர் நாகரிகமும் பண்பாடும் யாழ் வெளியீடு, சென்னை
7. நாகராசன் - குறுந்தொகை ஊேடீர் சென்னை, பதிப்பு - 2004
8. பாலசுப்பிரமணியன். கு.வெ. - நற்றிணை, சென்னை
9. புலியூர் கேசிகன் (2) - புறநானூறு பாரி நிலையம் சென்னை பதிப்பு - 2003
10. மோகன். இரா - பத்துப்பாட்டு 1,2 சென்னை.
11. லூர்து. தே - நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுலையம் தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை - 627 002 பதிப்பு - 1997
12. விசுவநாதன். அ - கலித்தொகை சென்னை.